ஆவடி மாநகராட்சி,
சென்னை – 54.
நாள்:31.07.2020

திருக்குறள்:– தனக்கு உவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

பொருள் :– தனக்கு நிகர் இல்லாதவராகிய இறைவனின் திருவடிகளை இடைவிடாமல் நினைப்பவர்க்கு அல்லாமல் மற்றவர்க்கு மனத்தில் நிகழும் துன்பங்களைப் போக்கிப் கொள்ளல் இயலாது.

## <u>சாதாரணக் கூட்டம்</u>

திருவள்ளுவர் ஆண்டு 2048 ஸ்ரீ சார்வாரி வருடம் ஆடி திங்கள் 16–ம் நாள் ஜுலை 2020, 31–ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஆவடி மாநகராட்சி அலுவலக மாமன்ற சாதாரணக் கூட்டம் கீழ்க்காணும் பொருள் குறித்து முடிவெடுக்க நடைபெற உள்ளது.

## பொருள் எண்–1

ஆவடி மாநகராட்சி பொது சுகாதார பிரிவுக்கு கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக இம்மாநகராட்சியில் உள்ள 1 முதல் 6 கோட்டம் ஆகியவைகளில் 48 வார்டுகளில் உள்ள பொது மக்களுக்கு தினந்தோறும் கபசுர குடிநீர் வழங்குவதற்கு 15 லிட்டர் கொண்ட கேன் 75 எண்ணிக்கை நகராட்சி அவசரம் அவசியம் கருதி வாங்குவதற்கும் அதற்கான தோராய செலவினம் ரூபாய் 1,30,000/- க்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.
(ந.க.எண்.2700/2020/எச்1)

**அலுவலக குறிப்பு:-** மாமன்றம் அனுமதிக்கலாம்.

// மாமன்ற தீர்மான எண் 542 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //

## பொருள் எண்–2

ஆவடி மாநகராட்சி பொது சுகாதார பிரிவு அவசர அவசியம் கருதி கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக 48 வார்டுகளில் உள்ள பொது மக்களுக்கு தினந்தோறும் கபசுர குடிநீர் வழங்குவதற்கு 15 லிட்டர் கொண்ட கேன் வாங்குவதற்க்கு 13.04.2020 அன்று உள்ளூர் விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. அதன் ஒப்பு நோக்கு பட்டியல் மாமன்றத்திற்க்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | கேன் | எஸ்.ஏ.எஸ் டிரேடார்ஸ் எண். 20, விஸ்வாசநகர், மதுரவாயல், சென்னை – 95 | ஸ்ரீ வாரி எண்டார்பிரைசஸ் ஏபி- 101, பி.கே.எஸ் காம்ப்லக்ஸ், அண்ணாநகர், சென்னை - 40 | பேன்சி ஏஜேன்சி எண்.27, ஜவகர் தெரு, கிருஷ்ணமூர்த்தி நகர், சென்னை - 118 |
|---|---|---|---|---|
| 1. | 15 லிட்டர் கொண்ட கேன் (1 எண்ணிக்கை) | 1750 | 1760 | 1700 |

(ந.க.எண்.2700/2020/எச்1)

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. குறைந்த உள்ளுர் விலைப்புள்ளி வழங்கி உள்ள பேன்சி ஏஜேன்சி எண்.27, ஜவகர் தெரு, கிருஷ்ணமூர்த்தி நகர், சென்னை – 118 என்ற நிறுவனத்திற்க்கு முன் அனுமதி பெற்று வினியோக உத்தரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

// மாமன்ற தீர்மான எண் 543 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //

**பொருள் எண்–3**

ஆவடி மாநகராட்சி பொது சுகாதார பிரிவுக்கு கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக PPE KIT அவசரம் அவசியம் கருதி வாங்குவதற்கும் அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2700/2020/எச்1

**அலுவலக குறிப்பு:-** மாமன்றம் அனுமதிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 544 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்–4**

ஆவடி மாநகராட்சி பொது சுகாதார பிரிவு அவசர அவசியம் கருதி கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக 1 முதல் 6 கோட்டங்களின் துப்புரவு ஆய்வரின் குறிப்பின் படி பெறப்பட்ட பொருட்களுக்கான உள்ளூர் விளைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. அதன் ஒப்பு நோக்கு பட்டியல் மாமன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பொருட்களின் பெயர் | அளவு | SRI VISALAM TRADERS, Royapettai Chennai. (including GST+) | LAKSHMI ENTERPRISES Kolathur, Chennai (including GST+) | RASI SALES CORPORATION, KK nagar, Madurai. (including GST+) |
|---|---|---|---|---|---|
| 1 | PPE KIT | 1 | 1000 | 1295 | 1090 |

(ந.க.எண்.2700/2020/எச்1)

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. குறைந்த உள்ளூர் விலைப்புள்ளி வழங்கி உள்ள SRI VISALAM TRADERS. Royapettai, Chennai. என்ற நிறுவனத்திற்கு முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 545 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்–5**

ஆவடி மாநகராட்சி பொது சுகாதார பிரிவுக்கு ஆவடி, காமராஜ் நகர், காந்தி நகர், திருமுல்லைவாயில், தண்டுரை மற்றும் பட்டாபிராம் போன்ற கோட்டங்களில் உள்ள பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு வீடுவீடாக சென்று 1,00,000 துண்டுபிரசுரம் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு செய்வதற்கு அவசியம் அவசரத்தை கருதி துண்டுபிரசுரம்களை அச்சிட்டு வாங்கவும் மற்றும் இதற்கான தோராயசெலவு ரூபாய் 1,80,000க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண்.2700/2020/எச்1)

**அலுவலக குறிப்பு:-** மாமன்றம் அனுமதிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 546 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்–6**

ஆவடி மாநகராட்சி பொது சுகாதார பிரிவுக்கு ஆவடி, காமராஜ் நகர், காந்தி நகர், திருமுல்லைவாயில், தண்டுரை மற்றும் பட்டாபிராம் போன்ற கோட்டங்களில் உள்ள பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு வீடுவீடாக சென்று 1,00,000 துண்டுபிரசுரம் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு செய்வதற்கு துண்டுபிரசுரம்களை அச்சிட்டு வாங்குவதற்க்கு 12.05.2020 அன்று உள்ளூர் விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. அதன் ஒப்பு நோக்கு பட்டியல் மாமன்றத்திற்க்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | DEQUE PRESS H.O 2, Chennai By Pass Road, Khaja Nagar, Trichy-20. | PRINT SOLUTIONS No. 87/5, T.TK. Road, Alwarpet, Chennai-18. | UNIVERSAL D'SINGNERS No.20, Sadasuvam Street, Purasawalkam, Chennai-7. |
|---|---|---|---|---|
| 1. | துண்டுப் பிரச்சுரம் (ஒன்றுக்கு)A4 SIZE | 1.75 | 1.87 | 1.82 |

(ந.க.எண்.2700/2020/எச்1)

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. குறைந்த உள்ளூர் விலைப்புள்ளி வழங்கி உள்ள DEQUE PRESS H.O 2, Chennai By Pass Road, Khaja Nagar, Trichy-20. என்ற நிறுவனத்திற்க்கு முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 547 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //**

## பொருள் எண்–7

ஆவடி மாநகராட்சி பொது சுகாதார பிரிவுக்கு கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக இம்மாநகராட்சியில் உள்ள 1 முதல் 6 கோட்டங்களில் பணிபுரியும் அரசு மற்றும் தனியார் துப்புரவு பணியாளர்களுக்கு 1000 லிட்டர் Hand Sanitiser Solution வாங்குவதற்கு நகராட்சி அவசரம் அவசியம் கருதி வாங்குவதற்கும் அதற்கான தோராய செலவினம் ரூபாய் 4,50,000/-க்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.2700/2020/எச்1)

அலுவலக குறிப்பு:- மாமன்றம் அனுமதிக்கலாம்.

// மாமன்ற தீர்மான எண் 548 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //

## பொருள் எண்–8

ஆவடி மாநகராட்சி பொது சுகாதார பிரிவு அவசர அவசியம் கருதி கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக 1 முதல் 6 கோட்டங்களில் பணிபுரியும் அனைத்து அரசு மற்றும் தனியார் துப்புரவு பணியாளர்களுக்கு 1000 லிட்டர் Hand Sanitiser Solution வாங்குவதற்க்கு 04.05.2020 அன்று உள்ளூர் விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. அதன் ஒப்பு நோக்கு பட்டியல் மாமன்றத்திற்க்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | S.P.Y. AGRO INDUSTRIES LTD Plot no. 188 1st floor, phase-II kamalapuri colony, Hydrabad-500073. | SIDDARTHA MARKETING AGENCIES D.NO F/4-A, Industrial Esatate, Bommalastram,Nandyal-518502. | M/S. SREEKANTH TRADING PVT LTD H.NO 4-127, Kranthinagar, Nandyal - 518502 |
|---|---|---|---|---|
| 1. | Hand Sanitiser Solution (1 லிட்டர்) | 400 | 460 | 470 |

(ந.க.எண்.2700/2020/எச்1)

அலுவலக குறிப்பு:-

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. குறைந்த உள்ளூர் விலைப்புள்ளி வழங்கி உள்ள S.P.Y. AGRO INDUSTRIES LTD Plot no. 188 1st floor, phase-II kamalapuri colony, Hydrabad-500073. என்ற நிறுவனத்திற்க்கு முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

// மாமன்ற தீர்மான எண் 549 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //

**பொருள் எண்–9**

ஆவடி மாநகராட்சி பொதுசுகாதார பிரிவுக்கு ஆவடி, காமராஜ் நகர், காந்தி நகர், திருமுல்லைவாயில், தண்டுரை மற்றும் பட்டாபிராம் போன்ற கோட்டங்களில் உள்ள பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கையாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த 10000 துண்டு பிரசுரங்கள் அனைத்து வணிக நிறுவனங்களில் ஒட்டி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு செய்யவும் மற்றும் இதற்கான தோராயசெலவு ரூ.45000/–க்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.
(ந.க.எண்.2700/2020/எச்1)

**அலுவலக குறிப்பு:**

கொரோன வைரஸ் நோய்த் தடுப்பு விழிப்புணர்வு துண்டு பிரசுரம் 10000 எண்ணிக்கையில் அச்சிட மாமன்றம் அனுமதிக்கலாம்.

// மாமன்ற தீர்மான எண் 550 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //

**பொருள் எண்–10**

ஆவடி மாநகராட்சி பொதுசுகாதார பிரிவுக்கு ஆவடி, காமராஜ் நகர், காந்தி நகர், திருமுல்லைவாயில், தண்டுரை மற்றும் பட்டாபிராம் போன்ற கோட்டங்களில் உள்ள பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கையாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த 10000 துண்டு பிரசுரங்கள் அனைத்து வணிக நிறுவனங்களில் ஒட்டி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு செய்ய துண்டுபிரசுரங்கள் வாங்குவதற்க்கு 19.05.2020 அன்று உள்ளூர் விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. அதன் ஒப்பு நோக்கு பட்டியல் மாமன்றத்திற்க்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | DEQUE PRESS H.O 2, Chennai By Pass Road, Khaja Nagar, Trichy-20. | PRINT SOLUTIONS No. 87/5, T.TK. Road, Alwarpet, Chennai-18. | UNIVERSAL D'SINGNERS No.20, Sadasuvam Street, Purasawalkam, Chennai-7. |
|---|---|---|---|---|
| 1. | துண்டு பிரச்சுரம் (ஒன்றுக்கு)A4 SIZE (Front & Back) 10000 துண்டு பிரசுரங்கள் | Rs.44800 | Rs.56000 | Rs.51000 |

(ந.க.எண்.2700/2020/எச்1)

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. குறைந்த உள்ளூர் விலைப்புள்ளி வழங்கி உள்ள DEQUE PRESS H.O 2, Chennai By Pass Road, Khaja Nagar, Trichy-20. என்ற நிறுவனத்திற்க்கு முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

// மாமன்ற தீர்மான எண் 551 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //

## பொருள் எண்–11

ஆவடி மாநகராட்சி பொது சுகாதார பிரிவு திருமுல்லைவாயல், காந்தி நகர் மற்றும் பட்டாபிராம் ஆகிய கோட்டங்களில் திடக்கழிவு மேலாண்மை தூய்மை பணி மேற்கொள்ள 3 டிராக்டர்கள் அக்ரோ நிறுவனத்தின் மூலம் ஒப்பந்தம் செய்யப்பட்டு 20.02.2020 தேதி முடிவடைய உள்ளதால் பொது சுகாதார பணிக்கு அவசர அவசியம் கருதி இம்மாநகராட்சி ஒப்பந்தம் செய்யப்பட்ட வாலாஜபெட் அக்ரோ நிறுவனத்திடம் வாடகைக்கு ஏற்கனவே ஒப்பந்தம் செய்து வழங்கிய தொகைகே 3 டிராக்டர்கள் 21.02.2020 முதல் 20.07.2020 வரை 5 மாத காலத்திற்கு பணி நீடிக்கவும், இதற்கான தொகைச் செலவு ரூ.11.00 லட்சத்திற்கும் மற்றும் முன் அனுமதிக்காக மாமன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.
ந.க.எண்.6917/2018/எச்2

**அலுவலக குறிப்பு:-** மாமன்றம் அனுமதிக்கலாம்.

// மாமன்ற தீர்மான எண் 552 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //

## பொருள் எண்–12

ஆவடி மாநகராட்சி பொது சுகாதார பிரிவு ஆவடி, காமராஜ் நகர் மற்றும் தண்டுரை ஆகிய கோட்டங்களில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக 13 LCV வாகனம் அக்ரோ நிறுவனத்தின் மூலம் ஒப்பந்தம் செய்யப்பட்டு 10/04/2020 தேதியில் முடிவடைய உள்ளதால் பொது சுகாதார பணிக்கு அவசர அவசியம் கருதி 08.11.2019 ம் தேதி பெறப்பட்ட ஒப்பந்த புள்ளியில் குறைந்த ஒப்பந்த புள்ளியின் படி ஒப்பந்தம் செய்யப்பட்ட அக்ரோ நிறுவனத்திடம் வாடகைக்கு ஏற்கனவே ஒப்பந்தம் செய்து வழங்கிய தொகைக்கே 11/04/2020 முதல் 10/07/2020 வரை 3 மாத காலத்திற்கு கூடுதலாக பணி நீட்டிக்கவும் இதற்கான தோராய செலவு ரூ.25.00 லட்சத்திற்கு மற்றும் முன் அனுமதிக்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.
ந.க.எண்.6917/18/எச்2

**அலுவலக குறிப்பு:-** மாமன்றம் அனுமதிக்கலாம்.

// மாமன்ற தீர்மான எண் 553 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //

## பொருள் எண்–13

ஆவடி மாநகராட்சி ஆவடி மற்றும் திருமுல்லைவாயில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இவ்விரண்டு பகுதியிலும் அமைந்துள்ள நீர் உந்து நிலையங்களில் உள்ள மின் மோட்டார் பழுதுகளையும் மற்றும் நீர் உந்து நிலைய ஆண்டு பராமரிப்பு பணிகள் செய்யவும், மேலும் இவ்விரு பகுதிகளில் உள்ள பாதாள சாக்கடை குழாய் மற்றும் ஆள் இறங்கு குழிகளில் அவ்வப்போது ஏற்படும் அடைப்புளை நீக்கம் செய்து ஆண்டு பராமரிப்பு

பணி மேற்கொள்ள நகரமன்றம் தனது தீர்மான எண்.367, நாள் 23.03.2018ல் அனுமதியின்படி ரூ.36.00 இலட்சத்திற்கு V.B,Associates, Chennai அவர்களுக்கு பணி உத்தரவு 02.04.2018 அன்று வழங்கப்பட்டது. மேற்படி முதலாம் ஆண்டு பராமரிப்பு பணி 31.03.2019 அன்று முடிவடைந்துள்ளதை தொடர்ந்து பாராளுமன்ற தேர்தல் நடத்தை விதிமுறைகள் காரணமாக 30.07.2019 வரை நான்கு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்தும் மற்றும் 36MLD கழிவுநீரேற்று நிலையம் பணிகள் முடிவடையும் தருவாயில் இருந்த காரணத்தினால் 01.08.2019 முதல் 31.03.2020 வரை 8 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்யப்பட்டது. மேலும் 18வது வார்டு பகுதியில் அமைந்துள்ள 36MLD கழிவுநீரேற்று நிலையம் பணிகள் முடிவடைந்து தற்போது சென்னை மெட்ரோ நிறுவனத்தின் மூலம் மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி 48 வார்டு பகுதிகளில் உள்ள நீர் உந்து நிலையங்களில் உள்ள மின் மோட்டார்கள், உந்து நிலைய ஆண்டு பராமரிப்பு பணி, பாதாள சாக்கடை குழாய் மற்றும் ஆள் இறங்கு குழிகளில் ஏற்படும் அடைப்புகளை நீக்கம் செய்து 2020–2021 புதிய ஒப்பந்ததாரர் இறுதி செய்யப்படும் வரை 3 மாத காலத்திற்கு 01.04.2020 முதல் 30.06.2020 வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்துக்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.461 நாள்31.03.2020ந் தேதியில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலும் தற்போது கொரான நோய் தொற்று சென்னை மாநகர பகுதி மற்றும் திருவள்ளுர் மாவட்டங்களில் நாளுக்குநாள் கூடுதலாக பரவி வருவதாலும், பணியாளர்களின் வருகை குறைவாக உள்ளதாலும் பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையருக்கு சமர்ப்பித்து உரிய Inprinciple Clearance பெற முடியாத சூழ்நிலையில் உள்ளது. ஆவடி மாநகராட்சி பகுதி சென்னையையொட்டி அமைந்துள்ள வளர்ந்து வரும் நகரமென்பதால் பராமரிப்பு பணியின் அவசர அவசியத்தை கருதி புதிய ஒப்பந்ததாரர் இறுதி செய்யப்படும் வரை குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரரது குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் எவ்வித உயர்வின்றி ஒரு வருட காலத்திற்கு 01.07.2020 முதல் 30.06.2021 வரை பணி மேற்கொள்ளவும், V.B,Associates, Chennai, என்ற நிறுவனத்திற்கு , கால நீட்டிப்பு செய்து பாதாள சாக்கடை பராமரிப்பு பணி தொடர்ந்து மேற்கொள்ளவும், இதற்காகும் செலவினம் தொகை ரூ.36.00 இலட்சத்திற்கு (3.00x12=36,00,000/-) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. அலுவலக பணியின் அவசியம் கருதி மாமன்றம் அனுமதி அளிக்கலாம். பணியின் அவசர அவசியத்தை கருதி கால நீட்டிப்பு செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பாதாள சாக்கடை பராமரிப்பு பணியின் அவசரத்தை கருத்தில் கொண்டு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் பணி உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

<u>// மாமன்ற தீர்மான எண் 554 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //</u>

## <u>பொருள் எண்–14</u>

ஆவடி மாநகராட்சி 65 சதுர கி.மீ பரப்பளவு கொண்ட நகரமாகும். இந்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 48 வார்டுகளில் வார்டு எண்.7 முதல் 19 வரை, 21 முதல் 32 வரை 36, 38, 39, 41 மற்றும் 47 ஆகிய வார்டு பகுதிகளில் (மொத்தம் 30 வார்டுகள் ) அமைந்துள்ள 19344 மின் விளக்குகளின் பராமரிப்பு பணியை மேற்கொள்ள மன்றம் தனது தீர்மான எண்.470, நாள் 29.06.2018ல் அனுமதி வழங்கியதன்பேரில் திருவாளர்.V.K.காண்ட்ராக்டர்ஸ், சென்னை அவர்களுக்கு பணி உத்தரவு 06.06.2018ந் தேதியில் வழங்கப்பட்டது. மேலும் ஜவகர்லால் நேரு புணரமைப்பு திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் ஆகிய இரு திட்டப்பணிகள் முடிவுற்று

மாநகராட்சி வசம் சென்னை மெட்ரோ நிறுவனத்தால் ஒப்படைக்கப்பட்ட நிலையில், மாநகராட்சி வார்டு பகுதிகளில் வீட்டு இணைப்பு பணிகள் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி வீட்டு இணைப்பு வழங்கப்படும் வார்டு பகுதிகளில் கூடுதல் கவனம் மற்றும் பணிகள் விரைவில் முடிக்க ஏதுவாக மின்கம்பியாளர்கள் மற்றும் மின்கம்பி உதவியாளர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற காரணத்தினால், தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுடன் மின் பணிகளையும் கவனிக்க இயலாத நிலை உள்ளதால், ஆவடி மாநகராட்சி பகுதியிலுள்ள மொத்தம் 48 வார்டுகளில் உள்ள 19556 தெருவிளக்குகளை 2020–2021 ஆம் ஆண்டிற்க்கு தனியார் மூலம் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள உரிய Inprinciple Clearance பெறும் நிலையில் கொரான தொற்று நோய் காரணமாக நகராட்சி நிர்வாக ஆணையருக்கு உரிய பிரேரணை சமர்ப்பித்து பணிக்கான நிர்வாக அனுமதி வர காலதாமதம் ஏற்படுவதால் மேற்படி 2020–2021ஆம் ஆண்டுக்கு புதிய ஒப்பந்ததாரர் இறுதி செய்யப்படும் வரை 3 மாத காலத்திற்கு 01.04.2020 முதல் 30.06.2020 வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்துக்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.460 நாள்31.03.2020ந் தேதியில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலும் தற்போது கொரான நோய் தொற்று சென்னை மாநகர பகுதி மற்றும் திருவள்ளுர் மாவட்டங்களில் நாளுக்குநாள் கூடுதலாக பரவி வருவதாலும், பணியாளர்களின் வருகை குறைவாக உள்ளதாலும் பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையருக்கு சமர்ப்பித்து உரிய Inprinciple Clearance பெற முடியாத சூழ்நிலையில் உள்ளது. ஆவடி மாநகராட்சி பகுதி சென்னையையொட்டி அமைந்துள்ள வளர்ந்து வரும் நகரமென்பதால் தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசர அவசியத்தை கருதி புதிய ஒப்பந்ததாரர் இறுதி செய்யப்படும் வரை குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரரது குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் எவ்வித உயர்வின்றி ஒரு வருட காலத்திற்கு 01.07.2020 முதல் 30.06.2021 வரை பணி மேற்கொள்ளவும், திருவாளர்.V.K.காண்ட்ராக்டர்ஸ், சென்னை–53, என்ற நிறுவனத்திற்கு கால நீட்டிப்பு செய்து தெருவிளக்கு பராமரிப்பு பணி தொடர்ந்து மேற்கொள்ளலாம். இதற்காகும் செலவினம் தொகை ரூ.1,75,17,000/–க்கு (1459750x12=1,75,17,000/-) மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசர அவசியத்தை கருதி தனியார் மூலம் மேற்கொள்ள ஆகும் ஒரு வருட கால நீட்டிப்பு செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தெரு விளக்கு பராமரிப்பு பணியின் அவசரத்தை கருத்தில் கொண்டு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் பணி உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

<u>// மாமன்ற தீர்மான எண் 555 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //</u>

<u>பொருள் எண்–15</u>

ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளவும் அதன் அறிக்கை சமர்பிக்கவும் ஆய்வு கூட்டம் நடத்தப்படும் போது ஆய்வு கூட்டத்தில் கலந்து கொள்ளும் அலுவலர்களுக்கு சிற்றுண்டி, தேநீர்

மற்றும் உணவுகள் வழங்கவும் மற்றும் வேறு மாவட்டத்தில் இருந்து வரும் அலுவலர்களுக்கு தங்கும் வசதி மற்றும் உணவு வசதிகள் ஏற்படுத்தி தரவும் மேற்கண்ட கூட்டத்திற்கு தேவையான சிற்றுண்டி, தேநீர் மற்றும் உணவுகள் அடையார் ஆனந்த பவன் உணவகத்தில் இருந்து வாங்கி கொள்ள தோராய மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மாநகராட்சி ஆணையர் ஒப்புதல் பெற்று மாநகராட்சி சட்டம் 1981ன் படி பிரிவு 13–ன் கீழ் M/s.அடையார் ஆனந்த பவன் (A2B) உணவகத்திற்கு பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கும் அதற்கான மதிப்பீடு தொகை ரூ.5,00,000/– செலவு செய்ததற்கும் அதனை பொது நிதியில் மேற்கொண்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u> மாமன்றம் பதிவு செய்யலாம்.

<u>// மாமன்ற தீர்மான எண் 556 நாள் 31.07.2020 பதிவுசெய்யப்பட்டது //</u>

<u>பொருள் எண்–16</u>

ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஜவர்கர்லால் நேரு தேசிய புனரமைப்பு திட்டத்தின் கீழ் (JnNURM) அரசு ஆணை எண்.20, நாள் 22.01.2008ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு ரூ158.05 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டம் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியின் கீழ் இரண்டு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், 19 கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் கழிவுநீர் சேகரிப்பு குழாய்கள் (Collection System) மற்றும் ஆள் இறங்கும் தொட்டிகள் மேற்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டு சோதனை ஒட்டம் நடைபெற்று சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய பொறியாளர்கள் மூலம் மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி திட்ட பணியினை உடனடியாக பயன்பாட்டிற்கு கொண்டு வர மொத்தமுள்ள 19 எண்ணிக்கை கழிவுநீர் உந்து நிலையங்கள் இயக்க வேண்டியுள்ளதால் மேற்படி அனைத்து உந்து நிலையங்களுக்கு கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் மோட்டார் இயக்குதல், காவலர், Mazdoor பணியாட்களை ஆகியவர்களை உடனடியாக நியமிக்குமாறு மாநகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோர் அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி பணியினை ஒரு வருட காலத்திற்கு பணியினை மேற்கொள்ளவும் அதற்கான தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகைக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மிட்டனமல்லி, கன்னடப்பாளையம், கலைஞர் நகர், கோயில்பதாகை,திருமுல்லைவாயல் (திருவள்ளுவர் நகர் சுடுகாடு) ஆகிய பகுதியில் உள்ள உந்து நிலையங்களை இயக்குதல் கண்காணிப்பு பணி மேற்கொள்ளுதல் | 25.00 |
| 2. | சரஸ்வதி நகர், நன்னுால் தெரு (அண்ணனுார் இரயில் நிலையம் அருகில்), ராஜ்பாய் நகர், வெற்றி நகர் (பருத்திப்பட்டு அண்ணாமலை நகர்), எச்.வி.எப் சாலை (பக்தவட்சலபுரம்) ஆகிய பகுதியில் உள்ள உந்து நிலையங்களை இயக்குதல் கண்காணிப்பு பணி மேற்கொள்ளுதல் | 25.00 |

| | | |
|---|---|---|
| | | |
| 3. | பெரியார் நகர் (சலவையாளர் குடியிருப்பு), புதுநகர், தேவி நகர், கருணாநிதி தெரு ஆகிய பகுதியில் உள்ள உந்து நிலையங்களை இயக்குதல் கண்காணிப்பு பணி மேற்கொள்ளுதல் | 25.00 |
| 4. | சேக்காடு, பிள்ளையார் கோயில் தெரு (குண்டுரை மார்கெட்) நாகவள்ளியம்மன் கோயில் தெரு (குண்டுரை மேம்பாலம்), சோழன்நகர் முத்தாபுதுபேட்டை ஆகிய பகுதியில் உள்ள உந்து நிலையங்களை இயக்குதல் கண்காணிப்பு பணி மேற்கொள்ளுதல் | 25.00 |

அலுவலக குறிப்பு:-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதி எதிர் நோக்கியும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி பணியின் பொது நிதியில் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

// மாமன்ற தீர்மான எண் 557 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //

பொருள் எண்—17

ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வருகின்ற வடகிழக்கு பருவ மழை எதிர்நோக்கி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பருவ மழை காலங்களில் தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரினை உடனுக்குடன் அப்புறப்படும் வகையில் 5 எச்.பி முதல் 40 எச்.பி திறன் கொண்ட டிசல் இஞ்சின்கள் மற்றும் குழாய்கள் வாடகை அடிப்படையில் மேற்கொள்ளவும் மற்றும் டிசல் இஞ்சின் பயன்படுத்தும் போது மாநகராட்சி போதிய பணியாளர்கள் உடன் இருந்து இயக்க இல்லாத காரணத்தினால் வெளிகொணர்வு பணியாட்களை அமைத்து இயக்குவதற்கு ஏற்ப மதிப்பீட்டில் வழிவகை செய்து கொள்ளவும் மற்றும் மாநகராட்சிக்கு சொந்தமான டிசல் இஞ்சின்கள், மோட்டார்கள் பழுதுகள் நீக்கி சர்வீஸ் செய்யவும், மாநகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோர்கள் அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு கீழ்காணும் பணிகளுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் 1 முதல் 24 வரை தாழ்வான பகுதிகளில் உள்ள மழைநீரினை டீசல் இஞ்சின் மூலம் வாடகை அடிப்படையில் அமர்த்தி பணியாளர்களுடன் அகற்றும் பணிக்கு | 15.00 |
| 2 | வார்டு எண் 25 முதல் 48 வரை தாழ்வான பகுதிகளில் உள்ள மழைநீரினை டீசல் இஞ்சின் மூலம் வாடகை அடிப்படையில் அமர்த்தி பணியாளர்களுடன் அகற்றும் பணிக்கு | 10.00 |
| 3 | வடகிழக்கு பருவ மழையை எதிர் நோக்கி மாநகராட்சியில் இருப்பில் உள்ள டீசல் இஞ்சின்கள் , மோட்டார்கள் பழுதுகள் நீக்கி சர்வீஸ் செய்தல் பணி | 5.00 |

ந.க.எண்.3395/2020/இ1

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மேல் நடவடிக்கை தொடர மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

<u>// மாமன்ற தீர்மான எண் 558 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //</u>

<u>பொருள் எண்–18</u>

ஆவடி மாநகராட்சியில் கொரோனா தடுப்பு பணிகள், கபசுர குடிநீர், சுகாதார கணக்கெடுப்பு மற்றும் மருத்துவ முகாம் பணிகள் வார்டு எண் 17ல் உள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆவடி சட்ட மன்ற உறுப்பினர் மற்றும் மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் அவர்கள் கள ஆய்வின் போது ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் நீர் நிலைகளுக்கு செல்லும் பிரதான கால்வாய்கள் அனைத்தும் ஜே.சி.பி மற்றும் பொக்லைன் கொண்டு தூர் வாரி சேர் சகதிகள் அகற்றிட ஏதுவாக டிப்பர் லாரிகள் அமைத்தி சுத்தம் செய்து வருகிற மழை

காலங்களில் மழைநீர் செல்ல ஏதுவாக சரியான முறையில் ஏற்படுத்தி உடனடியாக மேற்கொள்ளுமாறு உத்தவிட்டதின் மேற்கொள்காட்டி மாநகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் மேற்படி பணியை உடனடியாக மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியதின் அடிப்படையில் வார்டு எண் 1 முதல் 24 வரை உள்ள கால்வாயினை ஜே.சி.பி மற்றும் பொக்லைன் கொண்டு தூர் வாரி சுத்தம் செய்யவும் அதற்கான மதிப்பீடு தொகை ரூ**24.90**இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.3395/2020/இ1

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மேல் நடவடிக்கை தொடர மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

<u>// மாமன்ற தீர்மான எண் 559 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //</u>

<u>பொருள் எண்–19</u>

ஆவடி மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள பெண்கள் கழிவறை கட்டிமுடிக்கப்பட்டு 10 ஆண்டுகள் மேல் பயன்பாட்டில் உள்ளதால் கழிவறை மிகவும் சேதமடைந்து பள்ளமாக உள்ளதால் தண்ணீர் வெளியே செல்லாமல் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. எனவே மேற்படி மாநகராட்சி அலுவலகத்தில் உட்புறத்தில் உள்ள பெண்கள் கழிவறையை சுத்தம்படுத்தி தரைமட்டத்தில் இருந்து உயர்த்திடவும் புதியதாக கதவு, ஜன்னல், தரை ஓடுகள் மற்றும் குழாய்கள் மாற்றி அமைக்கவும் மற்றும் நாப்கீன்கள் எரித்து சாம்பாளக்கிட புதியதாக இன்சினிரெடர் (Incinerator) பொருத்திடவும் மாநகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோர்கள் அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி பணியினை மேற்கொள்ள அதற்கான மதிப்பீடு தொகை ரூ2.95 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.3395/2020/இ1

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மேல் நடவடிக்கை தொடர மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 560 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்–20**

ஆவடி மாநகராட்சியில் கொரோனா தடுப்பு பணிகள், கபசுர குடிநீர், சுகாதார கணக்கெடுப்பு மற்றும் மருத்துவ முகாம் பணிகள் வார்டு எண் 17ல் உள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆவடி சட்ட மன்ற உறுப்பினர் மற்றும் மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் அவர்கள் கள ஆய்வின் போது ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் நீர் நிலைகளுக்கு செல்லும் பிரதான கால்வாய்கள் அனைத்தும் ஜே.சி.பி மற்றும் பொக்லைன் கொண்டு துார் வாரி சேர் சகதிகள் அகற்றிட ஏதுவாக டிப்பர் லாரிகள் அமைத்தி சுத்தம் செய்து வருகிற மழை காலங்களில் மழைநீர் செல்ல ஏதுவாக சரியான முறையில் ஏற்படுத்தி உடனடியாக மேற்கொள்ளுமாறு உத்தவிட்டதின் மேற்கொள்காட்டி மாநகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் மேற்படி பணியை உடனடியாக மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியதின் அடிப்படையில் வார்டு எண் 25 முதல் 48 வரை உள்ள கால்வாயினை ஜே.சி.பி மற்றும் பொக்லைன் கொண்டு துார் வாரி சுத்தம் செய்யவும் அதற்கான மதிப்பீடு தொகை ரூ**24.90**இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.3395/2020/இ1

அலுவலக குறிப்பு:–

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மேல் நடவடிக்கை தொடர மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 561 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்–21**

இம்மாநகராட்சி பொது நிதியின் கீழ் 10.07.2020 அன்று கீழ்க்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப் பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|---|
| 1 | 2,3, 4 மற்றும் 5 | வார்டு எண் 2,3, 4 மற்றும் 5 பகுதியில் மேடையுடன் கூடிய குடிநீர் HDPE தொட்டி அமைக்கும் பணி | 10.50 | S.Mari<br><br>K.R.Murugan | 0.01 % குறைவு<br><br>4.98 % அதிகம் |
| 2 | 7, 8, மற்றும் 9 | வார்டு எண் 7, 8, மற்றும் 9 (பகுதி) பகுதியில் மேடையுடன் கூடிய குடிநீர் HDPE தொட்டி அமைக்கும் பணி | 15.00 | R.Nimrode<br><br>R.M.Meenakshi Sundaram | 0.02 % குறைவு<br><br>4.55 % அதிகம் |
| 3 | 9 | வார்டு எண் 9 பகுதியில் மேடையுடன் கூடிய குடிநீர் HDPE தொட்டி அமைக்கும் பணி | 6.50 | M.A.Mathew<br><br>KKR Construction | 0.01 % குறைவு<br><br>4.98 % அதிகம் |
| 4 | 10 | வார்டு எண் 10 பகுதியில் மேடையுடன் கூடிய குடிநீர் HDPE தொட்டி அமைக்கும் பணி | 8.00 | G.Vijaya Construction<br><br>M.R.K.Construction | 0.01 % குறைவு<br><br>4.85 % அதிகம் |
| 5 | 10 மற்றும் 11 | வார்டு எண் 10 (பகுதி) மற்றும் 11 பகுதியில் மேடையுடன் கூடிய குடிநீர் HDPE தொட்டி அமைக்கும் பணி | 13.00 | R.Muralikrishnan<br><br>K.Rajaram Pandian | 0.02 % குறைவு<br><br>4.99 % அதிகம் |
| 6 | 11 மற்றும் 13 | வார்டு எண் 11 (பகுதி) மற்றும் 13 பகுதியில் மேடையுடன் கூடிய குடிநீர் HDPE தொட்டி அமைக்கும் பணி | 15.00 | D.Rajaprabudass<br><br>R.Janakiraman | 0.02 % குறைவு<br><br>4.10 % அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | 14,15,17, 18,19 மற்றும் 21 | வார்டு எண் 14,15,17,18,19 மற்றும் 21 பகுதியில் மேடையுடன் கூடிய குடிநீர் HDPE தொட்டி அமைக்கும் பணி | 12.20 | B.S.Construction<br><br>M.Sankaran | 0.02 % குறைவு<br><br>4.50 % அதிகம் |
| 8 | 2,3, 4 மற்றும் 5 | மாநகராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள HDPE தண்ணீர் தொட்டியில் தண்ணீர் விட ஏதுவாக மாநகராட்சி 6 எண்ணிக்கை குடிநீர் லாரிகளுக்கு PTO Arragements வசதி 5 எச்.பி திறன் கொண்ட மோட்டர் பொருத்துதல் பணி | 5.00 | Sakthi Body Works<br><br>ARV Body Builders | 0.01 % குறைவு<br><br>4.00 % அதிகம் |

கோப்பு எண்.2922/2020/இ2

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. வரபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1,2,3,4,5,6,7 மற்றும் 8 மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. அவசர அவசியத்தை கருதி தனி அலுவலர் முன் அனுமதியுடன் பணி உத்தரவு வழங்கியமைக்கு மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

<u>// மாமன்ற தீர்மான எண் 562 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //</u>

## <u>பொருள் எண்—22</u>

ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட இரண்டு அம்மா உணவகங்களில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்த 12% EPF தொகையுடன்மாநகராட்சி சார்பாக செலுத்த வேண்டிய பங்கு தொகை தோராயமாக ரூ.5,00,000/— மார்ச் 2021 வரை செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
ந.க.எண்.6441/2015/இ1

**<u>அலுவலக குறிப்பு :</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்.

<u>// மாமன்ற தீர்மான எண் 563 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //</u>

## <u>பொருள் எண்—23</u>

ஆவடி மாநகராட்சியில் கொரோனா பரிசோதனை மையம் அமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மருத்துவமனை வளாகத்தில் புதியதாக கொரோனா பரிசோதனை மையம் (COVID-19 Screening centre) வசதி ஏற்படுத்தி தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி தருமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தியுள்ளார்கள். மேலும் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற்று மேற்படி பணியினை உடனடியாக மேற்கொண்டு

ஒப்படைப்பு செய்யுமாறு மாவட்ட மருத்துவ இணை இயக்குநர் அவர்கள் கடிதம் மூலம் கோரியுள்ளார்கள். அதன் அடிப்படையில் மாநகராட்சி ஆணையர் அவர்களின் உத்தரவு பெற்று பொது சுகாதார பிரிவு மூலம் கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி இடமானது பொது பணி துறை கட்டுபாட்டில் உள்ளதால் மேற்படி இடத்தின் இணை இயக்குநர், துணை இயக்குநர், ஆணையர், பொறியாளர் , மாநகர நல அலுவலர், சுகாதார அலுவலர் ஆகியோர் கூட்டாய்வு செய்து அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி மருத்துவ வளாகத்திற்குள் புதியதாக கொரோனா பரிசோதனை மையம் கட்டிடத்திற்கு வாகனம் வந்து செல்ல தேவையான கான்கிரீட் சாலை அமைக்கவும் அதற்கான மதிப்பீடு தொகை ரூ4.00 இலட்சத்திற்கு அனுமதி கோரப்படுகிறது. மேலும் மேற்படி பணியினை கொரோனா சிறப்பு நிதியில் / பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண் 188 /2020/ இ1

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உடனடி உத்தரவினை பேரிலும் பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதிற்கு மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

<u>// மாமன்ற தீர்மான எண் 564 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //</u>

<u>பொருள் எண்-24</u>

ஆவடி மாநகராட்சியில் கொரோனா பரிசோதனை மையம் அமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மருத்துவமனை வளாகத்தில் புதியதாக கொரோனா பரிசோதனை மையம் (COVID-19 Screening centre) வசதி ஏற்படுத்தி தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி தருமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தியுள்ளார்கள். மேலும் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற்று மேற்படி பணியினை உடனடியாக மேற்கொண்டு ஒப்படைப்பு செய்யுமாறு மாவட்ட மருத்துவ இணை இயக்குநர் அவர்கள் கடிதம் மூலம் கோரியுள்ளார்கள். அதன் அடிப்படையில் மாநகராட்சி ஆணையர் அவர்களின் உத்தரவு பெற்று பொது சுகாதார பிரிவு மூலம் கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி இடமானது பொது பணி துறை கட்டுபாட்டில் உள்ளதால் மேற்படி இடத்தின் இணை இயக்குநர், துணை இயக்குநர், ஆணையர், பொறியாளர் , மாநகர நல அலுவலர், சுகாதார அலுவலர் ஆகியோர் கூட்டாய்வு செய்து அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி மருத்துவ வளாகத்திற்குள் புதியதாக கொரோனா பரிசோதனை மையம் கட்டிடம் அமைப்பதற்கான தேவையான Steel Truss, Barrigation வசதி அமைக்கவும் அதற்கான மதிப்பீடு ரூ20.50 இலட்சத்திற்கு அனுமதி கோரப்படுகிறது. மேலும் மேற்படி பணியினை கொரோனா சிறப்பு நிதியில் / பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண் 188 /2020/ இ1

**அலுவலக குறிப்பு:—**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உடனடி உத்தரவினை பேரிலும் பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதிற்கு மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 565 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்—25**

ஆவடி மாநகராட்சியில் கொரோனா பரிசோதனை மையம் அமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மருத்துவமனை வளாகத்தில் புதியதாக கொரோனா பரிசோதனை மையம் (COVID-19 Screening centre) வசதி ஏற்படுத்தி தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி தருமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தியுள்ளார்கள். மேலும் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற்று மேற்படி பணியினை உடனடியாக மேற்கொண்டு ஒப்படைப்பு செய்யுமாறு மாவட்ட மருத்துவ இணை இயக்குநர் அவர்கள் கடிதம் மூலம் கோரியுள்ளார்கள். அதன் அடிப்படையில் மாநகராட்சி ஆணையர் அவர்களின் உத்தரவு பெற்று பொது சுகாதார பிரிவு மூலம் கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி இடமானது பொது பணி துறை கட்டுபாட்டில் உள்ளதால் மேற்படி இடத்தின் இணை இயக்குநர், துணை இயக்குநர், ஆணையர், பொறியாளர் , மாநகர நல அலுவலர், சுகாதார அலுவலர் ஆகியோர் கூட்டாய்வு செய்து அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி மருத்துவ வளாகத்திற்குள் புதியதாக கொரோனா பரிசோதனை மையம் கட்டிடம் அமைப்பதற்கான தேவையான அளவு அடித்தளம் (Foundation) அமைத்து தருதல் மற்றும் கழிப்பறை வசதி ஏற்படுத்துதல் ஆகிய பணியினை மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீடு தொகை ரூ14.00 இலட்சத்திற்கு அனுமதி கோரப்படுகிறது. மேலும் மேற்படி பணியினை கொரோனா சிறப்பு நிதியில் / பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண் 188 /2020/ இ1

**அலுவலக குறிப்பு:—**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உடனடி உத்தரவினை பேரிலும் பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதிற்கு மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 566 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்—26**

ஆவடி மாநகராட்சியில் கொரோனா பரிசோதனை மையம் அமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மருத்துவமனை வளாகத்தில் புதியதாக கொரோனா பரிசோதனை மையம் (COVID-19 Screening centre) வசதி ஏற்படுத்தி தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி தருமாறு மாவட்ட ஆட்சித்

தலைவர் அவர்கள் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தியுள்ளார்கள். மேலும் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற்று மேற்படி பணியினை உடனடியாக மேற்கொண்டு ஒப்படைப்பு செய்யுமாறு மாவட்ட மருத்துவ இணை இயக்குநர் அவர்கள் கடிதம் மூலம் கோரியுள்ளார்கள். அதன் அடிப்படையில் மாநகராட்சி ஆணையர் அவர்களின் உத்தரவு பெற்று பொது சுகாதார பிரிவு மூலம் கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி இடமானது பொது பணி துறை கட்டுபாட்டில் உள்ளதால் மேற்படி இடத்தின் இணை இயக்குநர், துணை இயக்குநர், ஆணையர், பொறியாளர் , மாநகர நல அலுவலர், சுகாதார அலுவலர் ஆகியோர் கூட்டாய்வு செய்து அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி மருத்துவ வளாகத்திற்குள் புதியதாக கொரோனா பரிசோதனை மையம் கட்டிடம் உட்பகுதியில் தேவையான அலுமினிய தடுப்பு, False Ceiling வசதி ஏற்படுத்துதல் அதற்கான மதிப்பீடு தொகை ரூ11.50 இலட்சத்திற்கு அனுமதி கோரப்படுகிறது. மேலும் மேற்படி பணியினை கொரோனா சிறப்பு நிதியில் / பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண் 188 /2020/ இ1

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உடனடி உத்தரவினை பேரிலும் பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதிற்கு மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

<u>// மாமன்ற தீர்மான எண் 567 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //</u>

<u>பொருள் எண்–27</u>

இம்மாநகராட்சி பணியாளர்களுக்கு 2020–21ம் ஆண்டிற்கான முன்பண தலைப்பில் முன்பணம் வழங்க உள்ள விவரம் கீழ்கண்டுள்ளவாறு உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பண்டிகை முன்பணம் | – | ரூ.55,00,000/– |
| 2. | இருசக்கரவாகன முன்பணம் | – | ரூ.10,00,000/– |
| 3. | திருமண முன்பணம் | – | ரூ.5,00,000/– |
| 4. | இதர முன்பணங்கள் | – | ரூ.10,00,000/– |
| | | | ரூ.80,00,000/– |

அனைத்து முன்பணங்களின் செலவினங்களுக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 186 /2020/பி3)

<u>அலுவலக குறிப்பு :</u> முன்பண செலவினங்களுக்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.

<u>// மாமன்ற தீர்மான எண் 568 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //</u>

**பொருள் எண்–28**

ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 28 காமராஜ் நகர் முதல் தெருவில் நீண்ட காலமாக மழைநீர் கால்வாய் இல்லாமல் மழை காலங்களில் மழைநீர் வீட்டிற்குள் புகும் அபாயாம் இருப்பதாலும் ஆங்காங்கே மழைநீர் தேங்கி பொது சுகாதார கேடு ஏற்படுவதாலும் மேற்படி பகுதியில் மழைநீர் அமைத்து தரும்படி பொது மக்கள் மனு மூலம் கோரியுள்ளார்கள். மேற்படி பகுதியினை ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்கள் ஆய்வு செய்து அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி பகுதிக்கு புதியதாக மழைநீர் கால்வாய் அமைக்கவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ15.50 இலட்சத்திற்கு மதிப்பீட்டு தயார் செய்து அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் 3808 /2020/இ1)

**அலுவலக குறிப்பு:-**

1) மாமன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்

2) இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

3) 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

4) மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**// மாமன்ற தீர்மான எண் 569 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //**

**பொருள் எண்–29**

ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 36 மற்றும் 38 வார்டுகளில் அமைந்துள்ள சமுதாய கூடங்களில் தற்காலிக சுகாதார அலுவலகம் பொது மக்களுக்கு கபசுர குடிநீர் வழங்குதல், பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் தினசரி அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருவதால் மேற்படி இரண்டு சமுதாய கூடங்களிலும் தேவையான அலுமிய தடுப்பு அமைத்து அலுவலக வசதி ஏற்படுத்தி தருமாறு மாநகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்கள் ஆய்வு செய்து அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை ரூ7.20 இலட்சத்திற்கு மதிப்பீட்டு தயார் செய்து அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் 3808 /2020/இ1)

**அலுவலக குறிப்பு:-**

1) மாமன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்

2) இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

3) 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

4) மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

// மாமன்ற தீர்மான எண் 570 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //

## பொருள் எண்–30

இம்மாநகராட்சி பொது நிதியின் கீழ் 30.07.2020 அன்று கீழ்க்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப் பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|---|
| 1 | 1 முதல் 24 வரை | ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 24 வரை உள்ள அனைத்து மழைநீர் கால்வாய்கள் ஜே.சி.பி மற்றும் பொக்லைன் கொண்டு தூர் வாருதல் பணி | 24.90 | J.Gopi<br>P.Gangan | 0.01 % குறைவு<br>6.30 % அதிகம் |
| 2 | 25 முதல் 48 வரை | ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 25 முதல் 48 வரை உள்ள அனைத்து மழைநீர் கால்வாய்கள் ஜே.சி.பி மற்றும் பொக்லைன் கொண்டு தூர் வாருதல் பணி | 24.90 | J.Gopi<br>P.Gangan | 0.03 % குறைவு<br>5.30 % அதிகம் |
| 3 | 1 முதல் 24 வரை | வார்டு எண் 1 முதல் 24 வரை தாழ்வான பகுதிகளில் உள்ள மழைநீரினை டிசல் இஞ்சின் மூலம் வாடகை அடிப்படையில் அமர்த்தி பணியாளர்களுடன் அகற்றும் பணி | 15.00 | R.Pandian<br>R.Vadivelan | 0.01 % குறைவு<br>6.18 % அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | 25 முதல் 48 வரை | வார்டு எண் 25 முதல் 48 வரை தாழ்வான பகுதிகளில் உள்ள மழைநீரினை டிசல் இஞ்சின் மூலம் வாடகை அடிப்படையில் அமர்த்தி பணியாளர்களுடன் அகற்றும் பணி | 10.00 | Sadha Construction<br><br>RLG Associates | 0.02 % குறைவு<br><br>6.20 % அதிகம் |
| 5 | – | வடகிழக்கு பருவ மழையை எதிர் நோக்கி மாநகராட்சியில் இருப்பில் உள்ள டிசல் இஞ்சின்கள் , மோட்டார்கள் பழுதுகள் நிக்கி சர்வீஸ் செய்தல் பணி | 5.00 | Sadha Construction<br><br>RLG Associates | 0.02 % குறைவு<br><br>5.20 % அதிகம் |
| 6 | – | மாநகராட்சி அலுவலகதில் உள்ள பெண்கள் கழிப்பறையினை தரை மட்டம் உயர்த்தி புதியதாக கதவு ,ஜன்னல்கள் மாற்றி அமைத்தல் மற்றும் Incinerator, Closet பொறுத்தல் பணி | 2.95 | S.Gangatharan<br><br>K.R.Murugan | 2.30 % அதிகம்<br><br>4.99 % அதிகம் |

கோப்பு எண்.3395/2020/இ1

<u>அலுவலக குறிப்பு:-</u>

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பு நோக்கு பட்டியல் அனுமதிக்கலாம்.

**<u>// மாமன்ற தீர்மான எண் 571 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //</u>**

## <u>பொருள் எண்–31</u>

ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட திருமுல்லைவாயல் பகுதியில் சென்னை– திருத்தணி நெடுஞ்சாலை அமைத்துள்ளது. மழைக்காலங்களில் திருமுல்லைவாயல் பகுதியில் மழைநீரானது நெடுஞ்சாலை வழியாக வார்டு எண் 9ல் உள்ள அனுமன் நகர் எதிரில் சாலையின் குறுக்கே பாலம் அமைக்கப்பட்டு அதன் வழியாக அரபாத் ஏரிக்கு மழைநீர் செல்ல தேசிய நெடுஞ்சாலை மூலம் வழிவகை செய்யப்பட்டு உள்ளது. இந்த சாலையில் உள்ள பாலத்தின் மத்திய மற்றும் தெற்கு பகுதியில் கழிவுகளை அகற்ற வேண்டி 4x4 அடி அகலத்திற்கு திறந்தவெளியில் உள்ளது. இதில் இரவு நேரங்களில் கழிவுநீர் வாகனங்கள் மூலம் கழிவுநீர் வெளியேற்றும் செய்வது மாநகராட்சிக்கு கவனத்திற்கு தெரியவந்து பொது பணித்துறை, மாசு கட்டுப்பாட்டு வாரியம், வருவாய் துறை கூட்டாக இவ்விடத்தினை ஆய்வு செய்து கோட்டாச்சியர் அவர்கள் வழங்கிய அறிவுரையின் கீழ் இந்த 4x4 அடி அகலம் திறந்தவெளியினை மூடவும் மற்றும் அதில் இருந்து வெளியேறும் மழைநீரானது ஏரிக்கு சீரான முறையில் செல்லும் வகையில் 50 அடி நீளத்திற்கு கால்வாய் அமைக்க அறிவுரை வழங்கியதின் அடிப்படையில் உரிய மதிப்பீடு தயார் செய்து ரூ5.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்
3. 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

<u>// மாமன்ற தீர்மான எண் 572 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //</u>

**<u>பொருள் எண்–32</u>**

ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 9 மணிகண்டபுரம் மற்றும் சரவணா நகர் பகுதியில் உள்ள 500 குடியிருப்புகளில் இருந்து வெளியேறும் கழிவுநீரானது அப்பகுதியில் அமைந்துள்ள 9வது தெரு வழியாக அராபத் ஏரியினை சென்றடைகிறது. இதனால் இந்த ஏரி மாசு அடைகிறது. எனவே இப்பகுதியினை மாநகராட்சி, வருவாய் துறை, பொதுப்பணித்துறை மற்றும் மாசு கட்டுப்பட்டு வாரியம் கூட்டாக கள ஆய்வு செய்யப்பட்டு மணிகண்டபுரம் மற்றும் சரவணா நகர் பகுதியில் இருந்து வெளியேறும் கழிவுநீர் ஏரிக்கு செல்வதை முழுமையாக தடுக்கப்பட வேண்டும் என்று கோட்டாச்சியர் அவர்கள் வழங்கிய அறிவுரையின் படி இப்பகுதியில் குடியிருப்புகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் முற்றிலும் தடுக்கும் நோக்கில் மாநகராட்சி பொது சுகாதார பிரிவு மூலம் அறிவிப்பு கடிதம் வழங்கி கழிவுநீர் மழைநீர் வடிகாலில் விடும் வீட்டினை மேல் நடவடிக்கை எடுக்கும் படி கோட்டாச்சியர் அவர்கள் அறிவுரை வழங்கப்பட்டார். மேலும் குறுகிய காலத்தில் கழிவுநீர் ஏரிக்கு செல்வதை தடுக்கும் நோக்கில் 9வது சாலையில் 25000 லிட்டர் கொள்ளவு கொண்ட தரை மட்ட தொட்டி அமைத்து அதில் இருந்து வார்டு எண் 10ல் சோழம்பேடு பிரதான சாலையில் அமைந்துள்ள பாதாள சாக்கடை திட்ட ஆள் இறங்கும் குழாயில் பிரதான குழாய்கள் பதித்து மின் மோட்டார் பொருத்தி கழிவு நீரேற்றம் செய்ய மதிப்பீடு ரூ15.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்
3. 2020–21ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

<u>// மாமன்ற தீர்மான எண் 573 நாள் 31.07.2020 அனுமதிக்கப்பட்டது //</u>

**<u>பொருள் எண்–33</u>**

இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட **வார்டு எண் 17ல் பொது நிதியின் கீழ் வசந்தம் நகர் பிரதான சாலையில் புதியதாக சிறுபாலம் (RCC Culvert) அமைக்க** தயாரிக்கப்பட்ட மதிப்பீடு **ரூ.23.70** இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 3875/2020/இ1)**

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1) மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
